# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2181/28 - 2020 ජුනි මස 26 වැනි සිකුරාදා - 2020.06.26

*2181/28 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், குறித்த சபைக்கு கம்பஹா, அத்தனகல்லை மற்றும் மினுவன்கொட கூட்டிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் பஸ்னாகொட நீர்த்தேக்கத்தின் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய மக்களை மீள் குடியமர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிக்கு உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதன் பொருட்டு காணிப்பகுதிகளை சுவீகரித்துக்கொள்ள வேண்டியுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, யூன் 15.*
*5/3/GQ/02.*

**அட்டவணை**

*கம்பஹா மாவட்டத்தில், அத்தனகல்லை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 363, வெலிகடமுல்ல கிராம அலுவலர் பிரிவில் வெலிகடமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இலக்கம் கம். 4160 ஆரம்ப நில வரைபடத்தின் துண்டிலக்கம் 5 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணியில் இருந்து அண்ணளவாக 0.1098 ஹெக்டயார் விஸ்தீரணத்தையும் சபுகஸ்ஓவிடவத்த பார என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : வீதி, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோருகின்ற ஹபுகஹஓவிட, ஹபுகஹஓவிட வயல் மற்றும் வெடகெயாபொத வயல் மற்றும் துண்டு இலக்கம் 6 ;*

*கிழக்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோருகின்ற ஹபுகஹஓவிட, ஹபுகஹஓவிட வயல் மற்றும் வெடகெயாபொத வயல் மற்றும் துண்டு இலக்கம் 2 ;*

*தெற்கு : 2 ஆவது காணித்துண்டு ;*

*மேற்கு : வீதி (மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை), காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோருகின்ற ஹபுகஹஓவிட, ஹபுகஹஓவிட வயல் மற்றும் வெடகெயாபொத வயல் மற்றும் துண்டு இலக்கம் 7.*

*காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் : பிரதேச சபை, அத்தனகல்ல.*

*07-329*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.